ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – 2015–16 ஆம் ஆண்டின் அறிவிப்பு – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கான CAT (Common Admission Test) பொது நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி அளித்தல் – கூடுதல் விதிமுறைகள் ஏற்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை**

அரசாணை (நிலை) எண். 38 — நாள் : 03.12.2018

விளம்பி வருடம் கார்த்திகை 17,
திருவள்ளுவர் ஆண்டு 2049
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.25, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.3)துறை, நாள் 04.03.2015.
2. அரசாணை (நிலை) எண்.25, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.3)துறை, நாள் 01.03.2016.
3. அரசாணை (நிலை) எண்.44, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.3)துறை, நாள் 22.09.2016.
4. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண்.ம2/10400/2014, நாள் 28.05.2018.

------

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்கள் IIM போன்ற கல்வி நிறுவனங்களில் MBA போன்ற மேற்படிப்பு படிக்க நடத்தப்பெறும் பொது நுழைவுத் தேர்வில் (CAT- Common Admission Test) தேர்ச்சி பெறும் வகையில் ஆண்டிற்கு 100 தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு பொது நுழைவு தேர்வு பயிற்சி அளிப்பதில் தலைசிறந்த பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கவும் இதற்காக ஒரு மாணவருக்கு ரூ.50,000/- வீதம் 100 மாணாக்கர்களுக்கு ஆண்டுக்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிர்வாக ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்திற்கான விதிமுறைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், இத்திட்டத்தின் கீழ் பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களில் 100 தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு ஒரு மாணவருக்கு ரூ.50,000/– வீதம் 100 மாணாக்கருக்கு ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம்) தொகை 2016–17ஆம் நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

த.பி.பா

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல இயக்குநர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள ஒரு பயிற்சி நிறுவனத்தை தேர்வு செய்து ஒரே இடத்தில் உள்ள மாணாக்கர்களுக்கு இத்திட்டத்தினை செயல்படுத்துவது நடைமுறைப்படுத்த கூடியதாக இல்லை என்பதால், பயிற்சி நிறுவனத்தை தேர்வு செய்வதற்கான விதிமுறைகளை மாற்றி அமைக்குமாறு கோரியுள்ள தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கான CAT (Common Admission Test) பொது நுழைவுத் தேர்வு பயிற்சி அளித்தல் திட்டத்திற்கான விதிமுறைகளுடன் பின்வரும் கூடுதல் விதிமுறைகளை ஏற்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

I. ஒரே நிறுவனத்தை தேர்வு செய்வதற்குப் பதிலாக பல்வேறு நிறுவனங்களை தேர்ந்தெடுக்கலாம்.

II. மேற்படி பயிற்சியினை ஒரே நகரத்தில் மட்டும் மேற்கொள்ளாமல், திருச்சி, மதுரை, கோவை மற்றும் சென்னை ஆகிய நகரங்களிலும் நடத்தலாம்.

III. ஒவ்வொரு நகரத்திலும் பல்வேறு நிறுவனங்களை அங்கீகாரம் செய்யலாம். (தேவையான மற்றும் பொருத்தமான பயிற்சிகளை பொறுத்து)

IV. தற்போது உள்ள சந்தை விலை விகிதங்களை (Market Rate) அடிப்படையாக கொண்டு பாடத்திட்டம் (Syllabus) மற்றும் பயிற்சிக்கான கட்டணங்கள் நிர்ணயிக்கலாம்.

V. CAT தேர்வுக்கான பயிற்சியினை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் சேரும் ஆதிதிராவிடர் பயிற்சியாளர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கலாம்.

VI. பயிற்சியாளர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக தாட்கோவால் நிதி வழங்கப்படும் மாணவர்கள் பயிற்சி நிறுவனங்களின் வழக்கமான வகுப்புகளில் (Regular Class) கலந்து கொள்ள வேண்டும். தரமான பயிற்சியினை வழங்கும் பொருட்டும், பயிற்சியாளர்களின் வருகை குறைபாடு ஏற்படாதிருக்கும் பொருட்டும், தனி வகுப்புகள் (Separate Class) அனுமதிக்கக் கூடாது.

VII. மாணவர்கள் வழக்கமான வகுப்புகளில் சேர்க்கப்பட வேண்டும்.(Regular Class) இணையதளம் (Online) அல்லது விரைவாக முடிக்கும் வகுப்புகளாக (Crash Course) இருக்க கூடாது.

VIII. பயிற்சியின் காலம் குறைந்தபட்சம் 100 மணி நேரம் இருத்தல் வேண்டும்.

IX. பயிற்சிக்கான கட்டணம் பயிற்சி நிறுவனத்தின் கட்டணம் அல்லது ரூ.50,000/– இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்பட வேண்டும்.

X. பயிற்சி நிறுவனத்தின் தேர்ச்சி விகிதம் தேசிய அளவில் நடத்தப்படும் போட்டி தேர்வுகளான MBA நுழைவுத் தேர்வு, CAT, CMAT, GMAT, XAT மற்றும் MAT ஆகிய தேர்வுகளைக் கடந்த 5 முதல் 3 வருடங்கள் வரையிலான தேர்ச்சி விவரம் கொண்டே கணக்கிடப்பட வேண்டும் மற்ற போட்டி தேர்வுகளை கவனத்தில் கொள்ள கூடாது. மேலும் பயிற்சி நிறுவனம் தேர்தெடுக்க, அந்நிறுவனம் கடந்த 5 ஆண்டுகளில் பட்டியலின மாணவர்கள் இவ்வாறான (CAT, CMAT, GMAT, XAT மற்றும் MAT) போட்டி தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற பங்களித்துள்ளதா என்ற விவரம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

6. இத்திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்த ஏதுவாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணாக்கர்களை தேர்வு செய்த விவரங்களையும் மற்றும் இத்திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக பயன்பெற்றோர் குறித்த விவரங்கள் தொடர்பான அறிக்கையினை தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.59158/ நிதித்(ஆதி(ம)பந) துறை /2018, நாள் 27.11.2018இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–600 005.
(சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் வழியாக)
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-600 018.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–600 035.
மாநில கணக்காயர், சென்னை 600 006/18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 600 001/5.
உதவி சம்பளக் கணக்கு அலுவலர்.

நகல்:–
மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித் (ஆதி(ம)பந)துறை, சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மைச் தனிச் செயலர், சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்